**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை:- திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2024 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 21-ஆம், நாள் வியாழன்கிழமை**
**CNR No.TNTI12-000112-2023**
**இடை மனு எண்.04/2023**
**இன்**
**அசல் வழக்கு எண்.99/2023**

ரங்கசாமி

... மனுதாரர்/1ம் பிரதிவாதி

**.. எதிர் ..**

ஆனந்தகுமார்

...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இறுதியாக 02.03.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எல்.பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.செந்தில்இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கை நிராகரிப்பு செய்து உத்தரவு பிறப்பிக்கும்படி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11 உடன் இணைந்த பிரிவு 151-ன்படி,

மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>:–

2.1.) மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், சட்டத்திற்கு எதிராக துஷ்பிரயோகம் செய்வதாகவும், சட்ட உண்மைகள் மற்றும் சட்ட வழக்குகளை மறைப்பதாக உள்ளதாகவும், அவிநாசி தாலூக்கா, தொரவலூர் கிராமத்தில் உள்ள க.ச.எண்.340ல் ஏ.3.98 1/2 மனுதாரருக்கு பாத்தியம் என்றும், வருவாய்த்துறை அதிகாரிகள் மேற்படி சொத்தினை முறையாக அளவீடு செய்யாததால், சோமசுந்தரம், ராமாத்தாள் மற்றும் ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், அதன் மூலம் தற்போது மனுதாரருக்கு க.ச.எண்.340/1–ல் ஏ.0.22 1/2 விஸ்தீரணம் குறைவாக உள்ளதாகவும், மேற்படி இடத்தின் சுவாதீனத்தை மீட்டெடுக்க அசல் வழக்கு எண்.232/2020 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், அழைப்பாணை சார்பு செய்யப்பட்ட பிறகு க.ச.எண்.340/1 உள்ள சொத்தை பொறுத்து சோமசுந்தரம் மற்றும் ராமாத்தாள் ஆகியோர் அவர்களது மகன் ஆனந்தகுமாருக்கு 02.09.2022 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண்.5286/2022 ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், சொத்தினைப் பொறுத்து சுவாதீனத்தில் பிரச்சினை ஏற்பட்டு இன்னும் உத்தரவு பிறப்பிக்கப்படாத நிலையில், சோமசுந்தரம் மற்றும் ராமாத்தாள்

ஆகியோர் வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையிலும், செட்டில்மெண்ட் ஆவணத்தைப் பொறுத்து உரிமை கோருவதாகவும், அது மனுதாரரை கட்டுப்படுத்தாது என்று கூறப்பட்டுள்ளது.

2.2.) தற்போது வாதி இந்த அசல் வழக்கினை மேற்கண்ட கோரிக்கையை மறைத்தும் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.232/2020-ஐ மறைத்தும் வாதி சொத்தின் உரிமையாளர் என்பதை போல அசல் வழக்கு எண்.232/2020 வழக்கினை தடை ஏற்படுத்த இந்த தேவையற்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், அதனை ஆரம்ப நிலையிலேயே தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், வாதியின் விற்பனையாளருக்கு ஏற்கனவே நடக்கும் வழக்கு நடவடிக்கைகள் குறித்து தெரியும் என்பதாலும், வழக்கு நிலுவையில் இருக்கும் போது வில்லங்கம் ஏற்படுத்தியுள்ளதாலும், வழக்கு சொத்து பிரிவு 52 சொத்துரிமை மாற்று சட்டத்திற்கு உட்பட்டது என்றும், செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது என்றும், செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி வாதிக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது இல்லை என்றும், முந்தைய வழக்கினை மறைத்துள்ளதாலும் வழக்கு நிலுவையில் இருக்கும் போது சொத்தை உரிமைமாற்றம் செய்துள்ளதாலும், அது சட்டத்தை தவறாக பயன்படுத்தியதாகும் என்றும், அதன்படி இந்த அசல் வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்குரை நிராகரிக்கதக்கது என்றும், மனுவை அனுமதிக்க வேண்டுமென்று வேண்டப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:—</u>

3.1.) மனு பொய் என்றும், சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூப்பிக்க வேண்டும் என்றும், அவிநாசி வட்டம், தொரவலூர் கிராமத்தில் அசல் க.ச.எண்.340ல் அடங்கிய பு.ஏ.3.98 1/2 விஸ்தீரணமானது வாதிக்கு முழுவதும் பாத்தியப்பட்டது என்றும், வருவாய்த்துறை அதிகாரிகள் மேற்படி சொத்தினை முறையாக அளவீடு செய்து உட்பிரிவுகள் செய்யாததால், சோமசுந்தரம், ராமாத்தாள் மற்றும் ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து அதன் மூலம் க.ச.எண்.340/1ல் மனுதாரருக்கு பு.ஏ.22 1/2 விஸ்தீரணம் குறைவாக உள்ளது என்பதும் மேற்படி சொத்தினைப் பொறுத்து மனுதாரர் அ.வ.எண்.232/2020—ஐ சுவாதீனம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்பது பொய்யான சங்கதி என்றும், தாவாச் சொத்திற்கும், வழக்கிற்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றும், அ.வ.எண்.232/2020—ல் எதிர்மனுதாரர் தரப்பினராக இல்லை என்றும், மேற்படி வழக்கு மற்றும் அதில் கோரியுள்ள பரிகாரமானது எதிர்மனுதாரரை எவ்விதத்திலும், கட்டுப்படுத்த கூடியது அல்ல என்றும், வழக்கினுடைய வழக்கு மூலமானது 05.12.2020 என்றும், தாவா வழக்கின் வழக்கு மூலமானது 08.09.2023 என்றும், மனுதாரர் கூறியுள்ளது போல் உட்பிரிவில் குழப்பம் ஏற்பட்டதாகவும், உட்பிரிவுகளை எதிர்த்து அதனை ரத்து செய்ய வருவாய் நீதிமன்றம்

செல்லவில்லை என்பதை மனுதாரரே அவசியம் நிரூபிக்க கடமைப்பட்டவர் என்று கூறப்பட்டுள்ளது.

3.2) நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பின்னிட்டு தான் பிரச்சனைக்குண்டான சொத்தான க.ச.எண்.340/1–ஐ பொறுத்து சோமசுந்தரம் மற்றும் ராமாத்தாள் ஆகியோர் கடந்த 02.09.2022 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண்.5286/2022 பொறுத்து அவர்களது மகன் ஆனந்தகுமாருக்கு செட்டில்மெண்ட் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர் என்ற விபரத்தை தெரிந்து கொண்டார் என்பது பொய்யான சங்கதி என்றும், சொத்தினைப் பொறுத்து சுவாதீனத்தில் பிரச்சினை ஏற்பட்டு இன்னும் உத்தரவு பிறப்பிக்கப்படாத நிலையில், சோமசுந்தரம் மற்றும் ராமாத்தாள் ஆகியோர் வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையிலும், செட்டில்மெண்ட் ஆவணத்தைப் பொறுத்தும் உரிமை கோருவது சட்டத்திற்குப் புறம்பானது என்பதும் அது மனுதாரரை கட்டுப்படுத்தாது என்பது பொய்யான சங்கதி என்றும், எதிர்மனுதாரருக்கு அவரது தந்தை ஏற்படுத்தி வைத்த 02.09.2022 ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ஆவணமானது Lispendent – தோஷத்தால் பாதிக்கப்பட்டதாகக் கூறுவது தவறு என்றும், அ.வ.எண்.232/2020 வழக்கில் கண்டுள்ள சொத்து விபரமானது ரங்கசாமி என்பவருக்கு அவரது குடும்பத்திற்குள் நடைபெற்ற பாகசாசனத்தில் " சி " ஷெட்யூலாக ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், தாவாச் சொத்தானது ரங்கசாமியின் சகோதரர் ராமசாமிக்கு

பாகசாசனத்தில் " பி " ஷெட்யூலாக ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், தாவாச் சொத்தானது ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட" பி " ஷெட்யூல் சொத்தில் அப்பாத்துரை, மணி, கோபால்சாமி ஆகியோருக்கு விற்பனை செய்யபட்டது போக மீதமுள்ள சொத்து என்றும், அ.வ.எண்.232/2020 வழக்கில் கண்டுள்ள சொத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதாலும், க.ச.340/1 காலையில் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணத்தை பொறுத்து இந்நீதிமன்றம் குறிப்பிட்ட எந்த ஒரு உத்தரவும் பிறப்பிக்காததால் இந்த எதிர்மனுதாரருக்கு அவரது பெற்றோர்கள் ஏற்படுத்தி வைத்த தானசெட்டில்மெண்ட் சொத்தான தாவாச் சொத்தும், தான செட்டில்மெண்ட் ஆவணமும், Lispendent – தோஷத்தால் பாதிக்கப்படாதவை என எதிர்மனுதாரர் தெரிவித்து கொள்வதாக கூறப்பட்டுள்ளது.

3.3) மூல ஆவணத்தில் செல்லப்பட்டுள்ளவாறு மனுதாரரும் அவரது சகோதரரான ராமசாமியும், அவரவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அடைவதற்கு தடபாத்தியத்திற்காக அவரவர்களுக்கு ஒதுக்கப்படும் விஸ்தீரணத்தில் தலா பு.ஏ.0.10 விஸ்தீரணம் ஒதுக்க வேண்டும் என சரத்து கண்டுள்ளதன் படி எதிர்மனுதாரரின் முன்னோரான ராமசாமி பு.ஏ.0.10 விஸ்தீரணத்தை ஒதுக்கியுள்ளதாகவும் ஆனால் இந்த மனுதாரர் க.ச.340/1 காலையின் தென்புறமாக இருப்பதாலும், எதிர்மனுதாரர் காலையின் வடபுறமாக இருப்பதாலும், மனுதாரர் பூமியை கடந்து செல்ல வேண்டி இருப்பதாலும், மனுதாரர் பாகசாசனத்தில்

சொல்லப்பட்டுள்ள சரத்துக்கள் படி அவருக்கு ஒதுக்கப்பட்ட விஸ்தீரணமுள்ள பு.ஏ.0.10 விஸ்தீரணமுள்ள தடபாத்தியத்திற்கு ஒதுக்காமல், எதிர்மனுதாரரும், அவரது பெற்றோர்களும், மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட விஸ்தீரணத்தில் பு.ஏ.0.22 1/2 விஸ்தீரணத்தை ஆக்கிரமிப்பு விட்டதாகக் கூறி மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ளதை பிராதினை பரிசீலிக்கும் போது தெரியவருகிறதாகவும், தாவா வழக்கானது மனுதாரர் கூறுவது போல் Barred by Law தோஷத்தினால் பாதிக்கவில்லை என்பதால் எதிர்மனுதாரரின் தாவா வழக்கை கட்டளை 7 விதி 11–ன்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டுள்ளது.

4) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:–</u>**

5.1.) மனு தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க மனுதாரரை 1ம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரரை வாதி என்றும் குறித்துரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக தொடரப்பட்டுள்ளது.

5.2.) மனு மற்றும் எதிருரையை கவனமாக பரிசீலித்து கருத்தில் எடுத்து கொண்டுள்ள சூழ்நிலையில் கட்டளை 7 விதி 11–ன் சட்ட வகைமுறையை இவ்விடத்தில் குறித்து உரைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

11. Rejection of plaint.-

The plaint shall be rejected in the following cases:—

(a) where it does not disclose a cause of action;

(b) where the relief claimed is undervalued, and the plaintiff, on being required by the court to correct the valuation within a time to be fixed by the court, fails to do so;

(c) where the relief claimed is properly valued, but the plaint is written upon paper insufficiently stamped, and the plaintiff, on being required by the court to supply the requisite stamp paper within a time to be fixed by the Court, fails to do so;

(d) where the suit appears from the statement in the plaint to be barred by any law;

(e) where it is not filed in duplicate;

(f) where the plaintiff fails comply with the provision of Rule 9.

Provided that the time fixed by the court for the correction of the valuation or supplying of the requisite stamp papers shall not be extended unless the court, for reasons to be recorded, is satisfied that the plaintiff was prevented by any cause of an exceptional nature from correcting the valuation or supplying the requisite stamp papers, as the case may be within the time fixed by the court and that refusal to extend such time would cause grave injustice to the plaintiff.

5.3.) மேற்கண்ட சட்ட வகைமுறையை கவனமாக பரிசீலிக்கையில் வழக்குரைக்கு வழக்கு மூலம் இல்லை என்றால் கட்டளை 7 விதி 11(a)–ன்படி வழக்குரையை நிராகரித்து உத்தரவிடலாம் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில்

எடுத்துக் கொண்டுள்ளது. 1ம் பிரதிவாதி ம.சா.ஆ.1 ஆவணத்தை குறியீடு செய்து ஏற்கனவே 1ம் பிரதிவாதிக்கும் சோமசுந்தரம், ஈஸ்வரமூர்த்தி மற்றும் ராமாத்தாள் ஆகியோர்களுக்கு இடையே அசல் வழக்கு எண்.232/2020 நிலுவையில் இருப்பதாகவும், அதில் சொத்தின் சுவாதீனம் கேட்டு வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், மேற்கண்ட அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போதே அசல் வழக்கு எண்.232/2020–ல் 1, 2 பிரதிவாதிகள் இந்த வாதிக்கு கடந்த 02.09.2022 தேதியில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளதாகவும், மேற்கண்ட அசல் வழக்கினை மறைத்தும் தாவா சொத்து சொத்துரிமை மாற்று சட்டம் பிரிவு 52–ன்படி கட்டுப்பட்டது என்பதை மறைத்தும் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்குரையை நிராகரிக்க வேண்டுமென்று 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

5.4.) அசல் வழக்கு எண்.232/2020–ல் இந்த வாதி ஒரு தரப்பினர் அல்ல என்றும், இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் கடந்த 08.09.2023 தேதியில் எழுந்துள்ளதாகவும், இந்த வழக்குரையை நிராகரிக்க மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் போதுமானதாக இல்லை என்று வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்துள்ள அசல் வழக்கு எண்.232/2020–ன் வழக்குரையின் சான்றிட்ட நகலை கவனமாக பரிசீலிக்கையில் மேற்கண்ட அசல் வழக்கு எண்.232/2020–ல் இந்த பிரதிவாதி

வாதியாக உள்ளார். இந்த பிரதிவாதி ஒரு சோமசுந்தரம், ராமாத்தாள், ஈஸ்வரமூர்த்தி ஆகியோர்கள் மீது சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க கோரி வழக்கு தொடர்ந்திருப்பதை அறியமுடிகிறது.

5.5.) அசல் வழக்கு எண்.232/2020–ல் குறிப்பிட்டுள்ள சொத்து தொரவலூர் கிராமம் காலை எண்.340/1–ல் உள்ள 23 செண்ட் சொத்து ஆகும். அச்சொத்தின் சுவாதீனம் கோரி 1ம் பிரதிவாதி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட சொத்தின் சொத்து விபரமும் இந்த வழக்கின் சொத்தின் சொத்து விபரமும் ஒன்றா என்று பரிசீலிக்கையில் காலை 340/1 தொடர்புடைய சொத்து தான் இந்த வழக்கு சொத்து ஆகும். காலை 340/1–ல் 1.64 ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமி ஆகும். மேலும் இந்த அசல் வழக்கில் " பி " அட்டவணை சொத்தாக காலை 340/4–ல் உள்ள வழித்தடத்தையும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி இந்த அசல் வழக்கில் இரண்டு அட்டவணை சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி தன்னுடைய எதிருரையில் 7 வது பத்தியில் அசல் வழக்கு எண்.232/2020 வழக்கில் கண்டுள்ள சொத்து விபரமானது ரங்கசாமி என்பவருக்கு அவரது குடும்பத்திற்குள் நடைபெற்ற பாகசாசனத்தில் " சி " செட்டியூலாக ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தானது மேற்படி ரங்கசாமியின் சகோதரர் ராமசாமிக்கு மேற்படி பாகசாசனத்தில் " பி " செட்டியூலாக ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தானது ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட " பி " செட்டியூல் சொத்தில் அப்பாதுரை, மணி, கோபால்சாமி

ஆகியோருக்கு விற்பனை செய்யப்பட்டது போக மீதமுள்ள சொத்து என்றும், அசல் வழக்கு எண்.232/2020 வழக்கில் கண்டுள்ள சொத்திற்கும் தாவா சொத்திற்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், காலை 340/1 காலையில் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணத்தை பொறுத்து எந்த ஒரு உத்தரவும் நீதிமன்றம் பிறப்பிக்காததால் இந்த எதிர்மனுதாரருக்கு அவரது பெற்றோர்கள் ஏற்படுத்தி வைத்த தானசெட்டில்மெண்ட் சொத்து தாவா சொத்து என்றும், Lis pendent தோஷத்திற்கு உட்படாதது என்று கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள பின்வரும் முன்தீர்ப்பினை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.

5.6.) Hon'ble Supreme court Judgment in Kum. Geetha, D/o Late Krishna & Others -Vs- Nanjundaswamy & Others {Civil Appeal No. 7413 of 2023 arising out of S.L.P. (C) No. 8147 of 2016], Dated on 31.10.2023, it has been held as under;

"11. There is yet another reason why the judgment of the High Court is not sustainable. In an application under Order VII Rule 11, CPC a plaint cannot be rejected in part. This principle is well established and has been continuously followed since the 1936 decision in Maqsud Ahmad v. Mathra Datt & Co4. This principle is also explained in a recent decision of this Court in Sejal Glass Ltd. v. Navilan Merchants (P) Ltd,5 which was again followed in Madhav Prasad Aggarwal v. Axis Bank Ltd , (2019) 7 SCC 158. The relevant portion of Madhav Prasad (supra) is extracted hereinunder:

"10. We do not deem it necessary to elaborate on all other arguments as we are inclined to accept the objection of the appellant(s) that the relief of rejection of plaint in exercise of powers under Order 7 Rule 11(d) CPC cannot be pursued only in respect of one of the defendant(s). In other words, the plaint has to be rejected as a whole or not at all, in exercise of power under Order 7 Rule 11(d) CPC. Indeed, the learned Single Judge rejected this objection raised by the appellant(s) by relying on the decision of the Division Bench of the same High Court.

However, we find that the decision of this Court in Sejal Glass Ltd. [Sejal Glass Ltd. v. Navilan Merchants (P) Ltd., (2018) 11 SCC 780 : (2018) 5 SCC (Civ) 256] is directly on the point. In that case, an application was filed by the defendant(s) under Order 7 Rule 11(d) CPC stating that the plaint disclosed no cause of action. The civil court held that the plaint is to be bifurcated as it did not disclose any cause of action against the Director's Defendant(s) 2 to 4 therein.

On that basis, the High Court had opined that the suit can continue against Defendant 1 company alone. The question considered by this Court was whether such a course is open to the civil court in exercise of powers under Order 7 Rule 11(d) CPC. The Court answered the said question in the negative by adverting to several decisions on the point which had consistently held that the plaint can either be rejected as a whole or not at all.

The Court held that it is not permissible to reject plaint qua any particular portion of a plaint including against some of the defendant(s) and continue the same against the others. In no uncertain terms the Court has held that if the plaint survives against certain defendant(s)

and/or properties, Order 7 Rule 11(d) CPC will have no application at all, and the suit as a whole must then proceed to trial.

12. Indoubtably, the plaint can and must be rejected in exercise of powers under Order 7 Rule 11(d) CPC on account of non-compliance with mandatory requirements or being replete with any institutional deficiency at the time of presentation of the plaint, ascribable to clauses (a) to (f) of Rule 11 of Order 7 CPC. In other words, the plaint as presented must proceed as a whole or can be rejected as a whole but not in part."

12. In view of the above referred principle, we have no hesitation in holding that the High Court committed an error in rejecting the plaint in part with respect to Schedule-A property and permitting the Plaintiffs to prosecute the case only with respect to Schedule-B property. This approach while considering an application under Order VII Rule 11, CPC is impermissible. We, therefore, set aside the judgment and order of the High Court even on this ground. **– என்று வழங்கியுள்ள கருத்து செறிவுமிக்க முன்தீர்ப்பினை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு பரிசீலிக்கையில் வழக்குரையை பகுதியாக நிராகரிக்க முடியாது என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.**

**5.7.) இந்த அசல் வழக்கில் உள்ள காலை 340/1 சொத்தும், அசல் வழக்கு எண்.232/2020-ல் உள்ள சொத்தும் ஒரே சொத்து என்று கூறுவதற்கு 1ம் பிரதிவாதி தரப்பில் முகாந்திரம் இருந்தாலும் இந்த அசல் வழக்கு இரண்டு அட்டவணை சொத்தை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண்.232/2020-ல் உள்ள சொத்தை பொறுத்து வாதி தானசெட்டில்மெண்ட்**

ஆவணம் பெற்றுள்ள போதிலும் அந்த சொத்து சொத்துரிமை மாற்று சட்டம் பிரிவு 52-ன்படி உட்கூறுகளுக்கு உட்பட்டது தான். அசல் வழக்கு எண்.232/2020-ல் இந்த வாதி ஒரு தரப்பினராக இல்லை. இந்த வழக்கில் மேற்படி அசல் வழக்கு எண்.232/2020-ன் பொருண்மையை குறிப்பிட்டு கூறவில்லை என்பது வழக்குரையை நிராகரிக்க காரணமாக அமையுமா என்றால் மேற்கண்ட அசல் வழக்கில் வாதி ஒரு தரப்பினராக இல்லாததாலும், இந்த அசல் வழக்கில் இரண்டு அட்டவணை சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாலும் ஒரு அட்டவணை சொத்து காலை 340/1 என்ற போதிலும், மற்றொரு அட்டவணை சொத்து காலை 340/4 ஆக உள்ளதாலும், வழக்குரையை பகுதியாக நிராகரிக்க முடியாது என்பதாலும், இந்த வழக்கிற்கு கடந்த 08.09.2023 தேதியில் வழக்கு மூலம் " பி " அட்டவணை சொத்தை பொறுத்து எழுந்துள்ளதாக வாதுரைக்கப்பட்டுள்ளதாலும், வாதி தாக்கல் செய்துள்ள இந்த அசல் வழக்கிற்கு வழக்கு மூலம் உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட சூழ்நிலையில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இந்த மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம்

செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 21.03.2024 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2024.03.21 10:01:57 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**பிற்சேர்க்கை :–**
**மனுதாரர் தரப்பு சான்றாவணம்:–**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | அ.வ.எண்.232/2020–ன் வழக்குரை சான்றிட்ட நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 24.09.1981 | பாகசாசனப்பத்திர எண்.713/1981–ன் கணினி சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 04.08.1999 | ஆவண எண்.50/1999–ன் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 28.05.2007 | கிரைய பத்திர எண்.2915/2007–ன் கணினி சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 04.08.1999 | கிரைய பத்திர எண்.639/1999–ன் கணினி சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 28.05.2019 | ராமசாமி கவுண்டரின் கணினி வழி இறப்பு சான்றிதழ் |
| எ.ம.சா.ஆ.6 | 25.10.2021 | கணினி வழி வாரிசு சான்றிதழ் |
| எ.ம.சா.ஆ.7 | 02.09.2022 | தானசெட்டில்மெண்ட் பத்திர எண்.5286/2022–ன் கணினி சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.8 | 30.11.2022 | நில உரிமை விபரங்கள் கணினி நகல் (பட்டா எண்.2014) |
| எ.ம.சா.ஆ.9 | 23.09.2022 | நில உரிமை விபரங்கள் கணினி நகல் (பட்டா எண்.2001) |
| எ.ம.சா.ஆ.10 | 11.09.2023 | க.ச.எண்.340–க்கான புல வரைப்படம் கணினி நகல் |
| எ.ம.சா.ஆ.11 | 18.10.2010 | கிரையப்பத்திர எண்.5405/2010–ன் கணினி சான்றிட்ட நகல் |

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2024.03.21 10:02:05 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.நி.ம.எண்.04/2023
இன்
அ.வ.எண்.99/2023
சீரான/வரைவு உத்தரவு
நாள்.21.03.2024
மா.உ.நீ., அவிநாசி